[திரு. மா. சின்னராசு] [1984 மார்ச் 29

என்னுடைய தொகுதியில் குப்பகோணம்புதூரில் ஒரு காவல் நிலையம் வேண்டுமென்று நீண்டகாலமாக வற்புறுத்தி வருகிறோம். மிக அவசியமாக தேவைப்படுகிறது என்பதைச் சொல்லி மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இறுதியாக ஒரே ஒரு கருத்தைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-30)

இறுதியாக ஒரே ஒரு கருத்தைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்தக் காவல் துறையிலே இருக்கின்ற பப்ளிக் பிராசிகியூட்டர்களுக்கு துணை புரிகின்ற வகையில், டைரக்டர் ஆப் பிராசிகியூஷன் என்ற முறையில் தனியாக ஒரு துறை அமைப்பதற்கான செயற்குறிப்பு இருந்து வருகிறது. அதை ஏற்படுத்துவதன் மூலம் சாட்சியங்களை முறையாகக் கோர்ட்டுக்கு கொண்டு வருவதற்கும் குற்றவாளிகளுக்கு முறையாக உரிய தண்டனை வாங்கிக் கொடுக்கவும் வாய்ப்பு ஏற்படும். ஆகவே, அதை அமைக்க அரசு விரைவாக முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, 30-3-1984 காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-30 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

எதுவுமில்லை.

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

100. தமிழ்நாடு காவல் துறை குறித்த ஆய்வுரை, 1983-84 (தமிழ், ஆங்கிலம்).

101. கோரிக்கை எண் 16—தமிழ்நாடு தீயணைப்புத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1984-85 (தமிழ், ஆங்கிலம்).

102. கோரிக்கை எண் 2—மாநில ஆயத் தீர்வைத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1984-85. (தமிழ், ஆங்கிலம்).

103. ‘வணிக ஒற்றுமை’ திங்களிதழ் மீதான அவை உரிமை மீறல் பிரச்சினை பற்றிய உரிமைக் குழுவின் அறிக்கை. (தமிழ்)